# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Provi

## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | தமிழ் மொழியும் இலக்கியமும் I, II<br>Tamil Language and Literature I, II | நேரம் :- 3 மணித்தியாலம் |
| சுட்டெண்:...................... | 22 \| T \| I,II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க:**
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட் விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1. அடக்கம் உடையார் அறிவிலர். இங்கு **அடக்கம்** என்பதன் ஒத்தசொல்
   (1) ஆரவாரம் (2) அமைதி (3) வெட்கம் (4) கலகம்

2. மார்தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே. இங்கு **மால்** என்பதன் ஒத்தசொல்
   (1) இந்திரன் (2) அரண்மனை (3) மறைவு (4) தரிசு

3. தம் நண்பரைத் தூற்றுவர். இங்கு **தூற்றுவர்** என்பதன் எதிர்ப்பதம்
   (1) நிந்திப்பர் (2) போற்றுவர் (3) பேசுவர் (4) திகைப்பூ

4. கட்டளைகளையெல்லாம் அதிவேகத்தில் நிராகரித்தது. இங்கு **நிராகரித்தது** என்பதன் எதிர்ப்பதம்
   (1) அங்கிகரித்தது (2) மறுதலித்தது (3) எதிர்த்தது (4) குறைத்தது

5. சுழலக் காண்பன பூந்தயிர் மத்து. இங்கு **பூந்தயிர்** என்பது
   (1) பூக்களால் செய்யப்பட்ட தயிர் (2) சுவையுள்ள தயிர்
   (3) பினைந்தெடுக்கப்பட்ட தயிர் (4) தேவர் உண்ணும் தயிர்

6. **பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி**
   (1) நட்பு, கேண்மை, கெழுதகைமை (2) கற்றோர், அறிவுடையோர், புல்லர்
   (3) உபாத்தியாயர், ஆசிரியர், கணக்காயர் (4) பேதை, பெதும்பை, மங்கை

7. **தொடர்பற்ற சொற்களின் இணைவு**
   (1) கம்பியூட்டர் – கணிப்பொறி (2) டைரக்டரி – விபரக்கொத்து
   (3) ப்ளொப்பி – இறுவெட்டு (4) மௌஸ் - வருடி

8. அமைப்பால் வேறுபடும் சொல்
   (1) பரணி (2) குறவஞ்சி (3) சதகம் (4) காப்பியம்

9. “டிக்கற் வேண்டாம் கையை விடு’ **டிக்கற்** ( tiket ) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்
   (1) பற்றுச்சீட்டு (2) நுழைவுச் சீட்டு
   (3) கணக்குச் சிட்டை (4) உறுதி

10. உடுவின் கூட்டம் திரள் என்பது போல குண்டர்
   (1) கூட்டம் (2) அவை (3) கும்பல் (4) அணி

11. ஒத்த கருத்துள்ள சொற்களால் அமைந்த இணைமொழி
   (1) இன்னார் - இனியார் (2) அறம் - மறம்
   (3) ஆதி – அந்தம் (4) குற்றம் - குறை

12. ஆயுள்முழுவதும் பிரமச்சாரியம் காத்து வாழ்பவன்
   (1) நைட்டிகன் (2) ஆத்திகன் (3) நாத்திகன் (4) நொதுமலாளர்

13. கத்தும் என்ற தொனிமரபுடன் **தொடர்புபடாதது**
   (1) கரடி (2) பூனை (3) கழுதை (4) குதிரை

14. கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர். இங்கு **வந்து வந்து** என்பது
   (1) இணைமொழி (2) இரட்டைக் கிளவி
   (3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

15. இதிலே என்ன வசதியென்றால் கணிப்பொறியல் காகிதம் மிச்சப்படுகிறது. இங்கு இடம்பெற்ற **காகிதம்** என்பது
   (1) ஆங்கில மொழி (2) போர்த்துக்கீசம் (3) டச்சு மொழி (4) பிரெஞ்சு மொழி

16. கழியும், வழியும், மொழியும், பொழியும். இத்தொடரில் இடம்பெற்ற சொல்லணி
   (1) எதுகை (2) மோனை (3) மடக்கு (4) சிலேடை

17. செய்ந்நன்றி மறவமை என்ற கருத்துத் தரும் பழமொழி
   (1) இன்னமிட்டார் வீட்டில் கன்னமிடாதே
   (2) இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை
   (3) ஆழமறியாமல் காலை விடாதே
   (4) ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணல்

18. பின்வருவனவற்றில் உவமைத் தொடராக அமைவது
   (1) தீப்பிணி (2) ஊமைவலி (3) விழிவேல் (4) மலர்க்கரம்

19. - பெற்றோர் விழிப்பாக இருக்கிறார்கள்
   - மாணவர்களது ஒழுக்கம் குறித்து அஞ்சத் தேவையில்லை
   மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்குப் மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
   (1) எனவே (2) எனினும் (3) அத்துடன் (4) ஆனால்

20. கதை சேமித்து வைத்த பைலைக் கூப்பிட்டேன். அது பேசாமல் கம்மென்று இருந்தது. இங்கு இடம்பெற்ற ஒலிக்குறிப்புச் சொல்
   (1) சேமிப்பு (2) பைல் (3) பேசாமல் (4) கம்மென்று

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. ககரம் **g** என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிப்பது
   (1) தாகம் (2) அகம் (3) மங்கை (4) கடல்

22. பின்வருவனவற்றில் இடைச்சொல்லைப் பகுதியாகக் கொண்டமைந்த வினைச் சொல்
   (1) வந்தான் (2) சித்திரித்தான் (3) போன்றான் (4) மாண்டான்

23. கொழுவிய பலாக்கனிகள் வாழை மரங்களின் மேலே உதிரும். இங்கு இடம்பெற்ற இடுகுறிச் சிறப்புப் பெயர்

(1) கொழுவிய பலா (2) பலாக்கனி (3) வாழை மரம் (4) மேலே உதிரும்

24. பின்வருவனவற்றில் கூட்டுவினையாக அமைவது

(1) விட்டுக்கொடுத்தான் (2) எழுதுகோல் (3) கேட்டான் (4) விசாலமான

25. ''கோபத்தோடு பேசினார்'' என்பது மூன்றாம் வேற்றுமையின்

(1) கலப்புறுப் பொருள் (2) காரணப்பொருள்
(3) வயைறைப் பொருள் (4) அடைமொழிப்பொருள்

26. அது கிர்ர்க், கிர்ர்க் என்று உயிர் பெறும் அதிசயத்தைப் பார்த்து இரசித்தனர். இங்கு இடம்பெற்ற **பார்த்து இரசித்தனர்** என்பது

(1) வினைமுற்றுத் தொடர் (2) வேற்றுமைத் தொடர்
(3) பெயரெச்சத் தொடர் (4) வினையெச்சத் தொடர்

27. பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர். இங்கு இடம்பெற்ற **பழுத்த** என்பது

(1) தனிவினையடை (2) தனிப்பெயரடை
(3) கூட்டுப் பெயரடை (4) கூட்டுவினையடை

28. நானும் காளையும் சூடு மதித்தோம் என்பது

(1) திணை வழுவமைதி (2) பால் வழுவமைதி
(3) எண் வழுவமைதி (4) இட வழுவமைதி

- **பொருத்தமற்ற சொற்தொகுதி இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க**

29. (1) பொருட்பெயர் : கதிரை, பந்து, நண்டு
(2) இடப்பெயர் : மைதானம், ஆகாயம், தீவு
(3) காலப்பெயர் : மார்கழி, நாள், கோடை
(4) சினைப்பெயர் : மனிதன், கண், காய்

30. (1) முற்றுவினை : படித்தான், நடந்தான், ஓடினான்
(2) எச்சவினை : ஓடிய, படித்த, எழுந்து
(3) தன்வினை : கட்டினான், கொடுத்தான், ஊட்டினாள்
(4) பிறவினை : கட்டுவித்தான், கொடுப்பித்தான், உருட்டினான்

- **புள்ளிக்ரோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க**

31. பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கற் தொடருக்கு தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று ………………….. வழங்கியது

(1) விளம்பரம் (2) பணம் (3) அனுசரனை (4) ஆதாரவு

32. அத்தியாவசிய தேவைகள் தொடர்பான விபரங்கள் …………………… மூலம் வெளியிடப்பட்டன

(1) சுற்றுநிருபம் (2) வர்த்தமானி (3) கடவுச்சீட்டு (4) ஆதனம்

33. பொதுநூலக கேட்போர் கூடம் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் …………………. செய்யப்பட்டது

(1) ஸ்தாபனம் (2) அங்குரார்ப்பணம் (3) புனர்நிர்மாணம் (4) நிர்மாணம்

34. பெற்றோல், எரிவாயு வழங்குமாறு கோரி மருத்துவர்கள்…………………… போராட்டம் செய்தனர்

(1) கவனயீர்ப்பு (2) அன்னதானம் (3) துப்பாக்கிக் குண்டு (4) அடிதடி

35. நீயோ, அவனோ, நானோ யார் இதைச் ...............
(1) செய்தோம் (2) செய்தது (3) செய்தார் (4) செய்தீர்

36. மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் சேர்ந்து அதிபரும் சிரமதானப்பணியில் .................
(1) ஈடுபட்டனர் (2) ஈடுபட்டது (3) ஈடுபட்டோம் (4) ஈடுபட்டார்

- **கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக**

பொங்கியும் மெலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர் சிலிர்க்கும்
சிங்கமே வானவீதி
திருதிருவென எரிக்கும்
மங்காத தணற்பிழம்பே
மாணிக்கக் குன்றே தீர்ந்த
தங்கத்தின் தட்டே வானத்
தகளியிற் பெருவிளக்கே

37. இப்பாடலில் விபரிக்கப்படுவது
(1) வானத்தில் சூரியன் ஒளிவிடல்
(2) சூரியன் சிங்கமாக வருணிக்கப்படல்
(3) சூரியன் விளக்காக உருவகிக்கப்படல்
(4) சூரியனின் வெப்பம்

38. இங்கு சிங்கமாக உருவகிக்கப்படுவது
(1) வானவீதி (2) சிங்கம் (3) குன்று (4) விளக்கு

39. ‘‘பொங்கியும் மெலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர் சிலிர்க்கும் சிங்கம்’’ என் தொடர் உணர்த்துவது
(1) வெம்மையின் கொடுமை (2) வெம்மையின் அவசியம்
(3) வெம்மையைச் சூரியன் நீக்கும் (4) வெம்மையைச் சூரியன் கொடுக்கும்

40. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. அகராதிகளை இயற்றுவதும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்களாகும்
ஆ. அகராதி வேலைக்கும் முடியவில்லை
இ. மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியை பொறுத்தது
ஈ. நமது வாழ்க்கை வளமுறுவதானால் சொற்கள் பெருகிக்கொண்டுதான் செல்லும்
உ. இம்மொழி வளர்ச்சிக்கு சொல்லின் வளர்ச்சி ஒரு சிறந்த அறிகுறியாகும்

(1) இ, உ, ஈ, ஆ, அ (2) இ, ஈ, உ, அ, ஆ
(3) இ, ஈ, அ, ஆ, உ (4) அ, ஆ, உ , இ, ஈ

(1x1=40 புள்ளிகள்)